ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை மறுநாள் சிறந்ததொரு நிதிநிலை அறிக்கையை நாட்டுக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள் (22 மார்ச் 1995) காலை 11.00 மணிக்கு கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

58. 1992-93-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

59. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

60. 1993-94-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

1995 மார்ச் 20] [பேரவைத் தலைவர்]

61. 1993–94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை (1948–ஆம் ஆண்டு மின்சாரம் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

62. 1993–94–ஆம் ஆண்டிற்கான செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

63. 1993–94–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் பதினோறாவது ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

20. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஒன்பதாம் பட்டியல்) வரிசை எண். 1 முதல் 100 வரை).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS